எம்.சி.ஓ.பி எண்: 5106/2022 தேதி: 05.08.2025

எ.மசா. : 1

பெயர் : என்கே நரசிம்மன்

த/பெ. : என்கே செல்லப்பா

வயது : 57

<u>**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**</u>

<u>**முதல் விசாரணை**</u>

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் எ.மசாஆ 1 முதல் 5 வரை தாக்கல் செய்கிறேன்.

<u>**மனுதாரா் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இந்த விபத்தில் ஈடுபட்ட டாடா வேன் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு இருந்தது என்றால் ஆமாம். விபத்து சமயத்தில் காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். விபத்து நடந்தது ஆவணங்களின் அடிப்படையில் உண்மைதான். எமசாஆ 3 ஆவணத்தின் படி டாடா வேனுக்கு முன்வலது பக்கம் பம்பர் சைடு –யில் பெயிண்ட் கிராச் உள்ளது என்றால் சரி. மேலும் அந்த வண்டியில் இணைக்கப்பட்டுள்ள கண்டெயினரில் வலது முன்பக்கம் கிராச் ஆகி உள்ளது. விபத்து நடந்த தேதி 25.08.2022. 15.08.2022 அன்று FC முடிந்துவிட்டது. FC அப்ளே செய்து 10 நாளைக்குள் வாராத காரணத்தால் FC உள்ளது என்றால் சரியல்ல. எமசாஆ 1 ஆவணம் மணிகண்டன் பெயரில் உள்ளது. விபத்தில் இறந்தவர் பெயர் மணிவண்ணன் என்றால் சரி. குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. இந்த விபத்து எங்கள் காப்பீடு செய்த வாகனத்தால் ஏற்பட்டுள்ள காரணத்தால் நாங்கள்தான் இழப்பீடு கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. காப்பீடு விதிமுறைகள் மீறப்பட்டுள்ளது.

X

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.